INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT

**மாசி 2017 இல் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் இல்லாது ஒழிக்கும் குழுவின் இலங்கை தொடர்பான பரிசீலனைக்காக மேற்கொள்ளப்பட்ட பொது சமர்ப்பித்தல்**

திகதி : 23 தை 2017

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**சுருக்கம்**

இச்சமர்ப்பிப்பு இன்றுவரை தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் உட்பட, இலங்கை பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர் சம்மந்தப்பட்ட பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான குற்றங்களில் இருந்து தப்பவிடப்படும் நடைமுறைகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்ட முறையில் இடம்பெற்று வருகின்றன என்பது தொடர்பானதாகும். இச்சமர்ப்பிப்பிற்கு வலுச்சேர்க்கும் வகையில் அரச பாதுகாப்பில் இருக்கும்போது தாங்கள் அனுபவித்த சித்திரவதை மற்றும் பயங்கரமான துஷ்பிரயோகங்களை விளக்கிய 55 பெண்களிடம் இருந்து அறிக்கைகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் ஆவணப்படுத்தியுள்ளது (ITJP). இவர்களில் 48 பெண்கள் முன்னாள் ஜனாதிபதி இராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழும் 7 பெண்கள்[1] ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் கீழும் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள். சித்திரவதையை மேற்கொள்ளும் வழிமுறைகளில் ஒன்றாப் பாலியல் வன்முறைகளை பயன்படுத்துவதை திட்டமிடப்பட்ட கொள்கையாகக் கொண்டிருந்தது என ஐ.நா சபையினாலும் குறிப்பிடப்பட்ட நம்பகமான குற்றச்சாட்டை பதவிக்கு வந்து இரண்டு வருடங்களாகியும் ஜனாதிபதி சிறிசேன மற்றும் அவரின் புதிய அரசாங்கம் விசாரணை செய்யவேண்டிய கடமையில் தோல்வி கண்டுள்ளது[2]. தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகளை விசாரணை செய்தல், இல்லாது ஒழித்தலுடன் அதற்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதில் தவறியதனூடாக, சிறிசேன அரசாங்கம் இத்தொடர்ச்சியான வன்முறைகளிற்கு உடந்தையாகக் காணப்படுகிண்றது. நேரடியாகவோ அல்லது கட்டளைப் பொறுப்பு மூலமோ பெண்களைச் சித்திரவதை செய்து பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பல இலங்கை காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் அடையாளம் கண்டுள்ளது.

---

1 One case straddled both Governments but is counted as a Rajapaksa era abduction though detained and tortured under the Sirisena period too.

2 A/HRC/30/CRP.2, September 2015, OHCHR Investigation into Sri Lanka (OISL): *"…incidents of sexual violence were not isolated acts but part of a deliberate policy to inflict torture (to obtain information, intimidate, humiliate, inflict fear). The practices followed similar patterns, using similar tools over a wide range of detention locations, time periods, and security forces, reinforcing the conclusion that it was part of an institutional policy within the security forces."* (Para 591)

இருப்பினும் இத்தனிநபர்களை பொறுப்புக்கூறவைப்பதில் இலங்கை அரசாங்கம் அரசியல் விருப்பு (Political Will) அற்றுக் காணப்படுகையில், குற்றத்திலிருந்து தப்பவிடப்படுதல் இலங்கையில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் ஆழமாகக் காணப்படுகிறது.

**உண்மை மற்றும் சர்வதேச செயற்றிட்டம் தொடர்பாக (ITJP)**

இலங்கையில் 2009 ம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்ட யுத்தத்திலும் அதன் பின்னரான காலகட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக வெளிக்கொணரப்பட்ட ஆதாரங்களுக்குப் பதிலிறுக்கும் வகையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்திற்கான நிறுவனம் (ITJP) மார்கழி 2013ம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்செயற்றிட்டமானது தென்னாபிரிக்காவில் உள்ள மனித உரிமைகள் மையத்தின் இயக்குனரும் நிலைமாறுகால நீதியின் நிபுணருமான யஸ்மின் சூக்காவினால் நிர்வகிக்கப்படுகின்றது. சித்திரவதை/ பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு இலங்கையை விட்டு வெளியேறிய தப்பிப்பிழைத்தவர்களிடம் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்கிறது. கடத்தல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக மூன்று அறிக்கைகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் ( பங்குனி 2014, ஆடி 2015, தை 2016) வெளியிட்டுள்ளது[3]

**<u>அரசபடைகளினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் (உறுப்புரை 5)</u>**

**1. பின்னணி**

**1.1 OISL**

இலங்கையின் உள்நாட்டு யத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பாக ஐ.நா.ம.உ.ச யின் இலங்கை மீதான விசாரணை (OISL4[4]) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2002 ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளை உள்ளடக்கிய அறிக்கையாகும். தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் வன்முறைகளைக் கண்காணித்து தொடர்ச்சியாக அறிக்கையிடுவதற்கான ஆணையை ஐ.நா.ம.உ.ச கொண்டுள்ளது. "2015 தை மாதம் தொடக்கம் சித்திரவதை தொடர்பான 14 சம்பவங்கள் நம்பகமான மூலங்களினூடாக எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது[5]" என புரட்டாதி, 2015ம் ஆண்டு மனித உரிமைகள் உயர் ஆணையாளர் கூறியிருந்தார். இவை, இலங்கையின் புதிய அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற சம்பவங்களாகும். இதில் குறிப்பிடப்பட்ட "நம்பகரமான" இரண்டு நிறுவனங்களில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டமும் ஒன்றாகும்.

**1.2 OISL இற்குப் பின்னரான காலப்பகுதி**

---

[3] (a) "An Unfinished War: Torture and Sexual Violence in Sri Lanka 2009 – 2014", Yasmin Sooka, The Bar Human Rights Committee of England and Wales and the International Truth & Justice Project, Sri Lanka, March 2014.
(b) "A Still Unfinished War: Torture and Sexual Violence in Sri Lanka 2009 – 2015", International Truth and Justice Project Project, July 2015.
(c) "Silenced: Survivors of Torture and Sexual Violence in 2015", ", International Truth and Justice Project Project, January 2016.

[4] A/HRC/30/CRP.2

[5] [5] Statement by UN High Commissioner for Human Rights Zeid Ra'ad Al Hussein via videolink to the Human Rights Council, 30 September 2015, http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=16539&LangID=E#sthash.XmlbQlxm.dpuf

2015 மற்றும் 2016 காலகட்டங்களில் இலங்கைப் பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களிடம் பெறப்படும் சான்றுரைகளை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் தொடர்ச்சியாக ஆவணப்படுத்தி வருகின்றது. புதிய அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற 36 சம்பவங்கள்[6] மற்றும் பாதிக்கப்பட்ட 8 பெண்கள்[7] தொடர்பான விரிவான தகவல்களுக்கு UNCAT[8] இன் 59 ஆவது அமர்விற்கு ITJP சமர்ப்பித்த அறிக்கைகயைப் பார்க்கலாம். அதில் சம்பவ தொகுப்பு[9], சித்திரவதைக் காயங்களின் புகைப்படங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின்[10] மேற்கோள்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐ.நா போன்றவற்றிற்கு நம்பகத்தன்மையுடைய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் "வெள்ளை வாகனக்" கடத்தல்கள் என்று கூறப்படும் விடயங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன (பந்தி11) என UNCAT[11] கூறியுள்ளதுடன், இதில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் 2015ம் ஆண்டு அறிக்கையில்[12] குறிப்பிடப்பட்டுள்ள 48 அடையாளம் காணப்பட்ட சித்திரவதைத் தளங்களும் குறிப்பிட்டுள்ளன.

உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் போரிற்குப் பின்னரான கடத்தல் மற்றும் சித்திரவதை தொடர்பான அறிக்கைகளை[13] ஐக்கிய இராச்சியத்தின் சொந்த நாடுகள் தொடர்பான தகவல் அறிக்கைகள் ( UK Country of Origin Information Report) மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் அரச துறையின் மனித உரிமைகள் அறிக்கைகள் ( US State Department Anual Human Rights Report) தொடர்ச்சியாக மேற்கோள்காட்டி வருகின்றன. நாங்கள் சிறிசேன அரசாங்கத்தின் கீழ் ஆவணப்படுத்திய 11 சம்பவங்கள் 2016 அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது[14].

## 1.3 குற்றத்தில் இருந்து தப்பவிடப்படல்

போருடன் தொடர்புடைய சித்திரவதை மற்றும் பெண்களுக்கெதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றத்திலிருந்து தப்பவிடப்படுதல் தொடர்ச்சியாகவும் பரந்தளவிலும் காணப்படுவதுடன், தற்போதுள்ள அரசாங்கம் அதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்குத் தவறியமை பல தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் இந்நிகழ்வுகள் மீளவும் வலுப்பெறுவதற்கு வழிகோலியுள்ளது. பாரதூரமான குற்றங்களை இழைத்த அல்லது அவற்றைச் செய்யும்படி கட்டளையிட்ட அல்லது சித்திரவதை / பாலியல் வன்முறைகள் இடம்பெறுவது தெரிந்தும் அவற்றை பார்த்துக்கொண்டிருந்த ஆயுதப்படைகளின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் காவல்துறையினரை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி சிறிசேனவின் அரசாங்கமும் விருப்பமற்று இருக்கின்றது என்பதை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் குறிப்பிடுகின்றது. இதற்கான காரணங்கள் :

---

6 *14 November 2016,* ITJP Press Release: UN Committee Against Torture should Investigate Secret Torture Sites Still Operating in Sri Lanka. http://itjpsl.com/assets/press/UNCAT-ITJP-press-release.pdf

7 See ITJP Chart of 2015/2016 cases at http://www.itjpsl.com/assets/ITJP-Chart-2015-and-2016-cases.pdf

8 Submission is at http://www.itjpsl.com/reports/submission-to-un-committee-against-torture but please note it reflects 33 cases while the press release mentions 3 additional cases.

9 Chart of 2015 and 2016 cases: http://www.itjpsl.com/assets/ITJP-Chart-2015-and-2016-cases.pdf

10 See ITJP Chart of 2015/2016 cases at http://www.itjpsl.com/assets/ITJP-Chart-2015-and-2016-cases.pdf

11 UNCAT, Concluding Observations on the 5th Periodic report of Sri Lanka, December 2016.

12 A Still Unfinished War, ITJP, July 2015, http://www.refworld.org/pdfid/56e2e1584.pdf

13 Sri Lanka COI Query Response- UPDATE, March 2016. Country of Origin Information, http://www.refworld.org/pdfid/56e2e1584

14 SRI LANKA 2015, Country Reports on Human Rights Practices for 2015, United States Department of State, Bureau of Democracy, Human Rights and Labor, See also many references to ITJP in the 2014 report: https://www.state.gov/j/drl/rls/hrrpt/2014humanrightsreport/#wrapper

(i) இலங்கையின் போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதிகளில் வழமையாக சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை இடம்பெறும் பெயர்போன சித்திரவதைத் தளங்களை நடத்திய ஒருவரை அரசாங்கம் UNCAT 59 ஆவது அமர்விற்கு தனது பிரதிநிதிகள் குழுவில் உள்ளடக்கியிருந்தது. இத்தனிநபரின் பெயர் OISL அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது. இவரது நடவடிக்கை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு போதியளவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இவ்விடயத்தை முற்றுமுழுதாக மறுத்துள்ளது பின்வருவனவற்றைக் காட்டுகிறது. (அ) முற்றுமுழுதாகக் குற்றத்திலிருந்து விலக்கப்படுதலை முன்னாள் அரசாங்கத்தில் இருந்தவர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும் அனுபவிப்பர். (ஆ) பாரதூரமான குற்றங்களைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பொது அதிகாரிகளை தகுதிகாண் செயல்முறைக்கு உட்படுத்தி தரப்படுத்துவதாக மனித உரிமைகள் சபையில் (HRC) அரசாங்கம் குறிப்பிட்டது வெறும் பொய்[15]. நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இவ்விடயம் விசேட நீதிப்பொறிமுறை அமைக்கப்படும்போது தீர்த்துவைக்கப்படும் எனக் குறிப்பிட்டார். ஏற்கனவே காணப்படும் சித்திரவதைக்கு எதிரான சட்டத்தின் கீழ் இவை ஏன் கையாளப்பட முடியாது எனக் கேட்டதற்கு இவ்வாறான ஆயிரக்கணக்கான சம்பவங்களால் சட்டமா அதிபர் திக்குமுக்காடிப் போயுள்ளார் எனக் குறிப்பிட்டார்[16].

(ii) திருகோணமலை கடற்படை முகாமின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள இரகசிய நிலக்கீழ் சித்திரவதைத் தளத்திற்கு - இவ்விடத்தை உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசச் செயற்றிட்டம் அவர்கள் அங்கு செல்வதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர்[17] வெளியிட்டிருந்தது - 2015 இல் ஐ.நா வின் வலுக்கட்டாயமாகவும், தன்னிச்சையற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக வேலை செய்யும் குழு சென்றிருந்தது. இவ் இடத்தில் ஆண்களும் பெண்களும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால் இது தொடர்பாக எந்தவிதமான நம்பகத்தன்மையுடைய விசாரணைகளும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், மற்றும் தப்பிப்பிழைத்தவர்களால் இந்த இடங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் எனக் கூறப்பட்ட இரு கடற்படை புலனாய்வு கட்டளை அதிகாரிகளின் பெயர்களையும் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. போரிற்குப் பின்னர் தடுத்துவைக்கப்பட்ட தமிழர்களை தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தியது தொடர்பாக கட்டளை அதிகாரி ரணசிங்க மற்றும் கட்டளை அதிகாரி வெலகெதர (வெலகெதர பிறிதொரு சம்பவத்தில் சாட்சியாகக் காணப்பட்டபோதிலும்) ஆகியோரை விசாரணைக்கு உட்படுத்தியதாகத் தெரியவில்லை[18].

(iii) அதிக அளவான சிறுவர் பாலியல் சுரண்டல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஐ.நா அமைதிகாக்கும் படைகளில் 23 பேருக்கு மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக UNCAT சுட்டிக்காட்டியுள்ளது ( பந்தி 41-2)[19]. இவர்கள் இழைத்த குற்றத்திற்கு ஈடான தண்டனை அவர்களுக்கு கிடைத்ததா என்பது தொடர்பான எந்தத் தகவல்களும் இல்லை. இச்சம்பவமும் எதிர்காலத்தில்

---

15 *Government not raised against of Sisira Mendis - Ruwan Wijewarden*, 11 December 2016, Lankaenewsweb at http://lankanewsweb.net/news/item/4869-government-not-raised-against-of-sisira-mendis-ruwan-wijewarden;
Commitment to Vet is in UN Resolution: A/HRC/30/L.29. Mr Mendis was brought out of retirement by the new Government to serve as an intelligence chief.

16 Foreign Minister, Mangala Samaraweera, answering questions at Chatham House, London (Chatham House rules did not apply), 11 January 2017.

17 A Still Unfinished War, July 2015, http://www.itjpsl.com/reports/a-still-unfinished-war

18 [18] ITJP Press Release: Trincomalee Torture Site, 20 November 2015, http://www.itjpsl.com/assets/press/20.11.15-Press-Release-TIJP-on-Trincomalee-Secret-Site-2.pdf; *Victims and witnesses: No protection, but persecution*, By Namini Wijedasa, The Sunday Times Lanka, 31 July 2016, http://www.sundaytimes.lk/160731/news/victims-and-witnesses-no-protection-but-persecution-202919

19 Concluding Observations on the 5th Periodic report of Sri Lanka, December 2016.

வரவிருக்கும் விசேட நீதிப்பொறியினால் கையாளப்படும் என நாட்டின் வெளிவிவகார அமைச்சர்[20] குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே சந்தேக நபர்கள் இராணுவ விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுள்ளதால் அவர் இவ்வாறு கூறியது எந்தவிதத்திலும் விளக்கமற்றே உள்ளது.

(iv) தற்போதுள்ள சாட்சிகளைப் பாதுகாக்கும் முறைமையானது எந்தவிதத்திலும் போதியதாகக் காணப்படாததுடன், இது சாட்சிகளுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். மேலும் வெளிநாடுகளில் இருக்கும் சாட்சிகள் அங்குள்ள தூதரகங்களினூடாக சாட்சியமளிக்க வற்புறுத்தப்படுவதானது அவர்களுக்கு (இலங்கையில் இருக்கும் பாதிக்கப்படக்கூடிய அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும்) பாதுகாப்பற்றே காணப்படுகின்றது[21].

அ) மேலதிக சட்ட ஆணையாளர் யசந்த கொட்டகொடவின் நேர்மை மற்றும் பக்கச்சார்பின்மை தொடர்பாக கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளன. ஏனெனில் இவர் இராஜபக்ச அரசாங்கத்திற்காக வேலை செய்த வேளை இடம்பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல்களை மூடிமறைத்ததாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. இக்கரிசனைகள் ஆசிய மனித உரிமை ஆணையகத்தால் மட்டுமன்றி IIGEP (International Independent Group of Eminent Persons) இனால் அதற்கு நிதியளித்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட இரகசிய அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் இவ்வறிக்கையை வாசித்துள்ளது[22].

ஆ) நந்தன முனசிங்க கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்குப் சித்திரை 2010 ஆம் ஆண்டு மாற்றப்படும்வரை உள்நாட்டு யுத்தகாலத்தில் நீண்ட காலமாக பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவில் (TID/CID) இயக்குநராகக் கடமைபுரிந்துள்ளார்[23]. இவர் 2007 ம் ஆண்டு கொழும்பில் ஐ.நா விசேட அறிக்கையாளர் மன்பிரட் நோவாக்கை (Manfred Nowak) வரவேற்றுள்ளார். நந்தன முனசிங்கவின் கட்டளையின் பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் வேறிடத்திற்கு மாற்றப்பட்டதாக திரு நோவாக் குறிப்பிட்டுள்ளார் (பந்தி 25). மேலும் திரு.முனசிங்க சித்திரவதை புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் எனவும் விசாரணை செய்யப்பட வேண்டியவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார் (பந்தி 13, பக்கம் 30)[24]. சாட்சிகளைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி சிறிசேன அரசாங்கத்தால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கட்டமைப்பிற்கு இவர் நியமிக்கப்பட்டிருப்பதானது மிகக்கவலைக்குரிய விடயமாகும். மீண்டும் இது பொது அலுவலர்களை தகுதிகாண் செயல்முறைக்கு உட்படுத்த வேண்டும் எனும் 2015ம் ஆண்டின் ஐ.நா தீர்மானத்தில் கூறப்பட்ட பொறுப்பை அரசாங்கத்தின் மீறுவதாகும்.

---

20 Ibid.

21 *NA for protecting victims and witnesses set up,* 8 January 2016, Ceylon Times, no longer available online, it says the appointments include: "Hamid Ghazali Hussain, Additional Solicitor General, **Yasantha Kodagoda,** Additional Secretary to the Ministry of Law and Order, Neel Hapuhinne, Senior Assistant Secretary to the Ministry of Women and Child Affairs, W.U.P. Premachandra and Senior Deputy Inspector General of Police (Crimes and Motor Vehicle/Traffic) **Nandana Munasinghe).** The chairperson was the retired High Court Judge Wimal Nambuwasam. Other members include Senior Lecturer at the Department of Public and International Law at the Faculty of Law, the University of Colombo, Dr. M.A.D.S.J. Shiranjani Niriella, Dr. Nimal Fernando, Deputy Inspector General of Police, Ashoka Wijethilake and Attorney-at-Law Sanjeewa Samaranayake.

22 *APPOINTMENT OF YASANTHA KODAGODA TO TORTURE COMMITTEE OF HRC-SL INAPPROPRIATE – AHRC*, Sri Lanka Brief, 22 September 2016, http://srilankabrief.org/2016/09/appointment-of-yasantha-kodagoda-to-torture-committee-of

23 A/HRC/7/3/Add.6, REPORT OF THE SPECIAL RAPPORTEUR ON TORTURE AND OTHER CRUEL, INHUMAN OR DEGRADING TREATMENT OR PUNISHMENT, MANFRED NOWAK, ON HIS MISSION TO SRI LANKA, http://www2.ohchr.org/english/bodies/hrcouncil/docs/7session/A.HRC.7.3.Add.6_ch.pdf

24 *"The Special Rapporteur recommends that prompt and independent investigations of all allegations of torture and ill-treatment be carried out in order to bring those responsible to justice (i.e. the alleged perpetrators, Inspector of Police Saman, Police Constable Perera, and the management of TID, including the Director of TID, Senior Superintendent of Police,* ***Nandana Munasinghe****, as well as the CID officers allegedly responsible for the ill-treatment of Nicholas Stephen)".*

## 2. உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தினால் நேர்காணப்பட்ட சித்திரவதை அல்லது பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள்

### 2.1 சம்பவ விபரங்கள்

**மொத்தம் :** 55 சம்பவங்கள்

**திருமணமான விபரம்**

திருமணமானவர்கள் : 30

தனிநபர்கள் : 22

கணவனை இழந்தவர்கள் : 2

பிரிந்து இருப்பவர்கள் : 1

**தமிழீழ விடுதலைப் புலிகளில் (த.வி.பு) இருந்த விபரங்கள்:**

பொதுமக்கள் : 20

த.வி.புகளினால் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்கள் : 8

2009 இற்கு முன்னர் த.வி.புகளினால் இருந்து விலகியவர்கள் : 5

த.வி.பு : 22

**கால விபரம் :**

சாட்சிகளின் தெரிவு தொடர்பாக உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் கவனம் வன்முறைகள் காணப்படுகின்றன என்பதை விடவும் வேறுபட்ட காலங்களே என்பது கால விபரத்தை நோக்கும் போது புலனாவது கவனிக்கப்படவேண்டிய ஒண்றாகும்.

பதினைந்து பெண்கள், பல வருடங்களாக பல்வேறுபட்ட இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் அல்லது பலமுறை வெவ்வேறான சந்தர்ப்பங்களில் கடத்தப்பட்டு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இரு சம்பவங்களில் ஐரோப்பாவில் புகலிடத் தஞ்சக் கோரிக்கை தோல்வியடைந்ததை அடுத்து வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குத் திரும்பிய பின் தடுத்துவைக்கப்பட்டு பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆறு வேறுபட்ட நாடுகளில் பெண்கள் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தினால் நேர்காணப்பட்டுள்ளார்கள்.

2016 : 1
2015 : 6[25]
2014 : 2
2013 : 10
2012 : 8
2011 : 4
2010 : 2
2009 : 18
2008 : 2
2007 : 1
2006 : 1

**போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதிகளில் சரணடைந்த அல்லது கைப்பற்றப்பட்டவர்கள் :** 19 (மனிக்பாமில் இருந்து கூட்டிச்செல்லப்பட்டவர்கள் உள்ளடங்கலாக)
**கடத்தப்பட்ட அல்லது கைது செய்யப்பட்டவர்கள் :** கொழும்பு (8), வவுனியா (8), கிழக்கு (3), வன்னி (9), கண்டி (1), யாழ் குடாநாடு (5), எங்கு என்று தெரியாதது (2)

**தடுத்துவைப்பு மற்றும் தவறான நடத்தைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்புப் படை உறுப்பினர்கள்[26] :**

---

25 One woman was abducted before 2015 but continued to be detained and tortured in 2015.

26 Numbers exceed total number of women because some were detained in multiple sites or on multiple locations

இராணுவம்[27] : 30

காவல் துறை[28] : (CID மற்றும் TID உள்ளடங்கலாக) : 24

கடற்படை : 2

எந்தப் பிரிவு என்பது தெளிவில்லாமை : 7

## 2.1 தடுப்புக் காவல் வகைகள்

### அ). கடத்தல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வு

29 பெண்கள் சாதாரண உடையணிந்த அலுவலர்களினால் வாகனத்தில்[29] கடத்தப்பட்டுள்ளதுடன், இவர்களில் 28 பேர் அடையாளம் காணமுடியாத இடத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டிருந்தனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்விடங்கள் இராணுவ முகாம்களாகவே காணப்பட்டிருந்தன. ஒரு பெண் வேறு வேறு வருடங்களில் இரு முறைகள் கடத்தப்பட்டுள்ளார். இவர்களது விடுவிப்பும் கடத்தப்பட்ட வடிவிலேயே இடம்பெற்றுள்ளது. தடுத்துவைக்கப்பட்ட இடத்தை மறைப்பதற்காக பாதிக்கப்பட்டவர்கள் கண்கள் கட்டப்பட்டே விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான கடத்தல்களின் வடிவங்கள் எமது முன்னைய அறிக்கைகளில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளன.

### ஆ) "புனர்வாழ்வு" சம்பவங்கள்

10 சம்பவங்கள் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த த.வி.புலிகளின் முன்னாள் பெண் போராளிகள் தொடர்பானவை. ஆனால் அவர்களை புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து ஏனைய இடங்களுக்கு மாற்றும்போதே பாலியல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

### (இ) முன்னணி காவலரண், பரிசோதனை நிலையம் மற்றும் சரணடையும் போது

இரண்டு சம்பவங்களில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட வேளை முன்னணி காவலரணில் (வட்டுவாகல் பாலம்) சரணடைந்த வேளை அல்லது காவலரணில், பெண்கள் இராணுவ அதிகாரிகளினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஏனைய சந்தர்ப்பங்களில், பெண்கள் சரணடையும் வேளை அல்லது மனிக்பாம் முகாமில் வைத்து தகவல் அளிப்பவர்களால் அடையாளம் காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

**(ஈ) கைது / கடத்தல்கள் :** ஐந்து சம்பவங்களில் பெண்கள் காவல் நிலையத்திற்கு கையொப்பம் இடுவதற்கு அல்லது வேறு விடயமாகச் செல்லும்போது கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டுள்ளனர். 2009 ம் ஆண்டு புல்மோட்டை காவல் நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் தடியொன்றின் மூலம் பாலியல் வல்லுறவு தனக்கு இடம்பெற்றதாக பெண் ஒருவா் விளக்கியுள்ளார். பெயர் குறிப்பிடப்பட்ட ஏனைய காவல் நிலையங்கள் : மவுண்லெவனியா, வவுனியா, நெல்லியடி காவல்துறை அலுவலக பின்புறம் அமைந்துள்ள குற்றத்தடுப்பு பிரிவினரின் அறை, மற்றும் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் தலைமையகம்.

**(உ) பாலியல் வல்லுறவு முகாம்கள் :** 3 பெண்கள் இராணுவத்தினரால் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டு பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்டிருந்தனர். இச்சம்பவங்கள் வேறு வேறு ஆண்டுகளில் ( 2007, 2009–2013, 2012-2015) இடம்பெற்றுள்ளதுடன் நான்கு வேறுபட்ட இடங்களில் இடம்பெற்றுள்ளன[30]. ஒன்று வவுனியாவிற்கு அருகாமையில், ஒன்று புத்தளத்திற்கு அருகாமையில், ஒன்று கொழும்பிலும் மற்றையது கொழும்புக்கு வெளியிலும் உள்ளன. ஆனால்

---

27 When a witness says the alleged perpetrators were wearing army uniforms.

28 When alleged perpetrators in plain clothes introduced themselves as CID/TID or wore police uniforms.

29 Such as a white, grey or black van or occasionally a jeep.

30 Two of the women were held in multiple sites over several years.

வடக்கு கிழக்கில் இவை இருக்கவில்லை. இரண்டு பெண்கள் விளக்கும்போது தங்களை ஒரு குழுவாக அறையொன்றில் தடுத்து வைத்திருந்ததாகவும், எந்த இராணுவமும் வந்து தெரிவுசெய்து அருகிலிருந்த அறைக்கோ அல்லது கூடாரத்துக்கோ பாலியல் வல்லுறவுக்காகக் கொண்டு சென்றதாகவும் கூறினார்கள்[31].

மூன்றாவது பெண் ஆறு மாதங்களாக மிக இருட்டான கூண்டொன்றில் தனியாக அடைத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அருகில் உள்ள அறைகளில் ஏனைய பெண்கள் அலறும் சத்தம் கேட்டதாகக் கூறினார்[32]. இரு சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரால் தொடர்ச்சியாக மாத்திரைகள்[33] அல்லது ஊசி மருந்து[34] கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். இவை கர்ப்பத்தடை மருந்துகளாக இருக்கலாம் என எண்ணியதாகவும் கூறினார்கள். மூன்றாவது சம்பவத்தில் பாலியல் வல்லுறவால் ஒரு பெண் கர்ப்பம் தரித்ததாகக் கூறினார்.

**2.3 பிரதேசங்கள்**

போரிற்குப் பின் பெண்கள் தடுத்துவைக்கப்பட்டு வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட இடங்கள்: மனிக்பாம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம், சம்பத்நுவர இராணுவ முகாம் (புல்மோட்டைக்கு அண்மையில்), ஜோசப் முகாம் (அல்லது வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையகம்), பூசா, ஓர்ஸ்கில் இராணுவ முகாம், பலாலி முகாம், கனகபுரம் முகாம் (கனகபுரம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், ஆனால் இங்குவைத்து சித்திரவதை செய்யப்படவில்லை.), சாவகச்சேரி 512 படை முகாம் மற்றும் ஏனைய முகாம்கள்[35]. இவை பம்பை மடு மற்றும் பூந்தோட்டம் "புனர்வாழ்வு" முகாம்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட காவல்துறை நிலையங்களுக்கும், 28 இரகசிய அல்லது அடையாளப்படுத்த முடியாத முகாம்களுக்கு மேலதிகமானதாகும்.

**2.4 பாலியல் வன்புணர்வு மற்றும் சித்திரவதை**

"புனர்வாழ்வு" முகாம்களில் வைத்திருந்த நான்கு பெண்கள், வேறு வழிமுறைகளில் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட 2 பெண்கள், மற்றும் இதைப் பற்றி கதைக்க விரும்பாத 3 பெண்கள் தவிர அனைத்துப் பெண்களும் தாங்கள் பாலியல் வன்புனர்விற்கு உட்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளார்கள். இதன் அர்த்தம், பல குற்றமிழைத்தவர்களால் வேறுபட்ட பல சம்பவங்களில் பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டதாக 46 பெண்கள் தெரிவித்துள்ளனர். 43 பெண்கள் ஏனைய மோசமான உடலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக விளக்கினார்கள்.

**2.5 இலஞ்சம்**

---

31 *"A senior officer came into the room and was asked to take his pick, like we were meat in a meat market. He looked around and chose me. He took me to another room and raped me";*
*"In my two years of my captivity in this camp, I was raped so many times I cannot give a number. It was countless. There were so many different men and many of them raped me on many occasions. I even tried not to keep clean - to be dirty and stinky but that did not make any difference. On many occasions the men would ejaculate in my mouth or all over my body. I could never get used to it in my mouth and I always gagged or tried to spit it out. Often there was anal sex often leaving me bleeding from my anus. Sometimes there were so many men at one time who all wanted sex they would take me or the others into the hall or on the veranda or the kitchen to rape us."*

32 *"I was only beaten, kicked and raped regularly - I may have been raped by more men but I remember the body smell and body type of the same four or five men who came very often to rape me. I could hear only women's voices in the surrounding rooms, I heard female voices on either side of my room. I could often hear screaming from other rooms and I feel convinced that the other women were also raped. I think the rapes happened mostly in the afternoon because it felt really hot".*

33 *"A man came regularly and gave me two pills in the beginning and later just one from a tin box".*

34 *"I would watch them load the syringe. They would take a small clear glass bottle with a little label with Sinhalese writing on it and shake it in their hands. It had clear fluid in it that looked like water. They held the glass bottle up and inserted the needle from below and then drew a certain amount into the syringe. They often did the same thing with a second clear glass bottle with clear liquid in it. I am not certain if they were mixing two medicines or they could not get the full amount out of the first bottle".*

35 Names omitted where it might reveal the identity of the woman.

தடுப்பில் இருந்து வெளியே வருவதற்காக இவர்களில் 43 பெண்களின் குடும்பங்கள் இவர்களைப் பிடித்து வைத்திருந்தவர்களுக்கு இலஞ்சம் வழங்கியுள்ளார்கள். இலஞ்சம் இல்லாமல் 11 பேர் விடுதலை செய்யப்பட்டதுடன் 2 சம்பவங்களில் தகவல்கள் சேகரிக்கப்படவில்லை.

## 3. அடையாளம் காணப்பட்ட குற்றமிழைத்த தனிநபர்கள்

தமிழ்ப்பெண்களை (மற்றும் ஆண்கள்) சித்திரவதைக்கு உட்படுத்தி பாலியல் வல்லுறவை மேற்கொண்டதில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்கள் (அ) கட்டளை அதிகாரிகளாக அல்லது (ஆ) நேரடியாகக் குற்றமிழைத்தவர்களாக அல்லது (இ) இக்குற்றங்களைப் பற்றி அறிந்தும் அவை தொடர்பான நடவடிக்கை எடுக்காதவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகவல்களானது 18 பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளிடம் இருந்து பெறப்பட்ட சான்றுரைகளை அடிப்படையாகக் கொண்டது.

### 3.1 குற்றம் சாட்டப்பட்டவர்களின் அடையாளங்கள்

இச்சமர்ப்பிப்பின் இரகசிய இணைப்பில் ஆறு நிழற்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பிரதிவாதிகளின் உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் சந்தேக நபரை முதலிலேயே விழிப்படையச் செய்யாது, இலங்கை அரசாங்கம் தற்போது இச்சம்பவங்களை நம்பகத்தன்மையாக விசாரணை செய்யும் இயலுமையையும், அரசியல் உறுதிப்பாட்டையும் CEDAW குழுவிற்கு நிரூபிக்கும் சூழலை ஏற்படுத்தவுமே உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் இவர்களின் பெயர்கள், பிரிவு, மற்றும் பதவி நிலைகள் போன்ற தகவல்களின் இரகசியத்தன்மையைப் பேணி வருகின்றது.

### 3.2 இவர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள்

இவர்களினால் பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுரைகளின்படி பாலியல் வல்லுறவுக் குற்றத்தைப் புரிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட இலங்கையின் மூன்று இராணுவ உயர் அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவர் அண்மையில் ஐ.நா அமைதிகாக்கும் பணியில் பணியாற்றியுள்ளார். நான்காவது அதிகாரி சித்திரவதை மேற்கொள்வதில் நேரடியாக ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஐந்தாவது நபர் சித்திரவதையை மேற்கொள்வதற்கான கட்டளையைப் பிறப்பித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அதேவேளை ஆறாவது நபர் சித்திரவதை இடம்பெறும் போது சித்திரவதை இடம்பெற்ற இடத்திற்குச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

## 4. பரிந்துரைகள்

### 4.1 CEDAW

தகுதிகாண் செயல்முறை மற்றும் தரப்படுத்தலுக்காகக் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பான இரகசியத் தகவல்களை இலங்கை அரசாங்கத்திடம் வழங்குவதற்கு உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் ஆவன செய்கிறது. CEDAW பின்வருவனவற்றை மிக அவதானமாக கண்காணிக்க வேண்டும் : (அ) இவர்களை பணியிலிருந்து இடைநிறுத்துதல், (ஆ) இத்தனிநபர்களை உத்தியோகபூர்வ பதவிகள் அல்லது ஐ.நா அமைதிகாக்கும் பதவிகளிலுக்காக தகுதிகாண் செயல்முறைக்கு உட்படுத்துதல், (இ) அவர்களை நீதிக்கு முன் கொண்டுவருவதை நோக்காகக் கொண்டு முழுமையான விசாரணையை மேற்கொள்ளுதல்.

அத்தோடு புதிய அரசாங்கத்தின் கீழ் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் தொடர்பாக உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் மற்றும் இலங்கைக்கு வெளியில் வேலைசெய்துவரும் ஏனைய குழுக்களினால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களைப் பரிசீலிப்பதற்காக ஜெனீவாவில் ஒரு சுயாதீனமான குழுவை OHCHR நியமிக்க வேண்டும் என CEDAW பிரேரணை செய்யவேண்டுமென நாங்கள் CEDAW குழுவைக் கேட்டுக்கொள்கிறோம்.

### 4.2 இலங்கை அரசாங்கம்

எமது கருத்தின்படி, இலங்கை அரசாங்கம் பெண்களின் மீதான (அல்லது ஆண்கள்) பாலியல் சித்திரவதைகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளைப் பொறுப்புக்கூற வைப்பதற்காக

அரசாங்கம் முன்மொழிந்த நீதிப்பொறிமுறையான கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில் இவை குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கீழ்வருவனவற்றை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கத்தைக் கோருவதுடன், அதன் முன்னேற்றங்களை CEDAW விற்கு அறிக்கையிட வேண்டும் என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் பரிந்துரைக்கின்றது:

- சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இந்த இராணுவ அதிகாரிகளை விசாரணை செய்வதற்காக, இலங்கையில் இறுதிக்கட்டப்போரில் ஈடுபட்ட இராணுவப் பிரிவுகளில் கடமையாற்றிய மற்றும் தொடர்ச்சியாக வடக்குக் கிழக்கில் கடமையாற்றும் இராணுவம் தவிர்ந்த, சுயாதீனமான இராணுவ நிபுணர்களைக் கொண்ட செயற்குழுவொன்றை அமைத்தல். இச்செயற்குழுவிற்கு இராணுவ ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், சித்திரவதை இடங்களைப் பார்வையிடுவதற்கும், முகங்களை அடையாளம் காணும் மென்பொருளைப் பயன்படுத்தவும், சட்டரீதியாகப் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசித் தொடர்பாடல்களைப் பெற்றுக்கொள்ளவும் தடங்கலற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும். விசாரணையில் ஈடுபடும் அனைவரின் மீதும் மாதாந்த பொய் கண்டறியும் சோதனை ( Lie Detector Test) மேற்கொள்ளப்படுவதுடன், இச்செயற்குழுவில் அரைவாசி அதிகாரிகள் தமிழ் இனத்தவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் போதுமானளவு பெண் விசாரணையாளர்களும் இக்குழுவில் இடம்பெற வேண்டும். இதில் பாதிக்கப்பட்ட மற்றும் மனவுளைச்சலுக்குள்ளானவர்களிடம் இருந்து பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுரைகளை எடுப்பதில் விசேட திறமையுடைய பால்நிலை அதிகாரி ஆகக்குறைந்தது ஒருவராவது இடம்பெற வேண்டும்.
- சுயாதீனமானதும் வெளிப்படைத்தன்மையுடையதுமான விசாரணையை மேற்கொள்வதுடன், ஆதாரங்கள் காணப்படுமிடத்து, சிவில் நீதிமன்ற அமைப்பின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இவை இராணுவ இரகசிய நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடாது.
- “ஆவணக் கடிதங்கள்” ( Letters Rotatory) போன்ற வழிமுறைகளினூடாக வெளிநாடுகளில் வாழும் சாட்சிகளிடம் இருந்து பாதுகாப்பானதும் இரகசியமான முறையினூடாக சான்றுரைகளைப் பெற்றுக்கொள்வதற்கான இலகுபடுத்தலை மேற்கொள்வது உட்பட சாட்சிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க முடியாத இலங்கைத் தூதுவராலயங்களினூடாக இவர்கள் சான்றுரைக்கும் வழிமுறைகள் மேற்கொள்ப்படக் கூடாது. இது சாட்சிகள் மற்றும் இலங்கையில் உள்ள அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பிற்கு அத்தியாவசியமானதாக மட்டுமன்றி, அப்பெண்களின் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாததாகும். ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்களின் கணவர் அல்லது பிள்ளைகளுக்கு, இவர்கள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டது தெரிந்திருக்கவில்லை.
- விசாரணையின் முடிவு இன்னும் வெளிவராத நிலையில், இரகசிய இணைப்பில் குறிக்கப்பட்டுள்ள ஆறு அலுவலர்களையும் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்தல்
- விசாரணையின் முன்னேற்றம் சிரமமாக CEDAW குழுவிற்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

சர்வதேச விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை அமைப்பதற்கு உதவிபுரிவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் முன்னர் விடுத்திருந்த அழைப்பை, அது மீண்டும் வலியுறுத்துகின்றது. இது தொடர்பான முன்னைய அழைப்பிற்கு வெளிவிவகார அமைச்சு இன்னமும் பதிலளிக்கவில்லை.

**4.3 மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம்**

இவ் ஆறு தனிநபர்களையும் பொறுப்பு கூறவைப்பதற்கான நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன், அமைதிகாக்கும் நடைமுறைகளை மேற்கொள்ளும் பிரிவு (DPKO) இவர்கள் எவரையும் மீண்டும் அமைதிகாக்கும் பணிக்கு உள்வாங்குவதை ஏற்றுக்கொள்ளாது இருப்பதை உறுதிப்படுத்துவார்

என்ற எதிர்பார்ப்புடன் இச்சமர்ப்பித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள இரகசிய தகவல்களை மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருடன் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் பகிர்ந்துள்ளது.

**4.4 அரசாங்கம்**

இலங்கை அரசாங்கம் தனது குடியகல்வு திணைக்களம், பயிற்சி மற்றும் விசாவிற்கான விண்ணப்பங்களைத் தெரிவுசெய்வதற்கும் அல்லது ஐக்கிய அமெரிக்காவை கருத்தில் கொள்கையில் 2016 ம் ஆண்டு மக்னிட்சி சட்டத்தின் கீழ் ( Magnistsy Act of 2016) இவர்கள் மீதான தடைகளைக் கொண்டுவருவது தொடர்பான உத்தேசத்திற்கு உதவும் என்ற நம்பிக்கையில் இது தொடர்பான தகவல்களையும் ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களின் விபரங்களையும் இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ள உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் எண்ணியுள்ளது.

முடிவு.